# EASTERN UNIVERSITY

# FACULTY OF ARTS & CULTURE

## PART II EXAMINATION IN BACHELOR OF ARTS (1999/2000)

## EXTERNAL DEGREE (JAN2004)

## ECO – 302 APPLIED ECONOMICS

ஏதாயினும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக. நேரம் : 3மணித்தியாலங்கள்

---

1. மூன்றாம் மண்டல நாடுகளில் விரைவான உலகமயமாதலை ஏற்படுத்திய காரணிகள் பற்றி விபரித்து,' உலகமயமாதலின் தாக்கங்களை இலங்கையினை மையமாகக்கொண்டு பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

2. "ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கங்கள் மாற்றமடையும் போது பொருளாதார கொள்கைகளும் மாற்றம் அடைதல் என்பது இலங்கையினுடைய பொருளாதாரப் பண்புகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது."

   அ. இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை 60 களிலும், 70 களிலும் ஏற்பட்ட கட்டமைப்பு மாற்றங்களை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

   (10 புள்ளிகள்)

   ஆ. 1977 ஆம் ஆண்டு இலங்கைப் பொருளாதாரமானது தாராள மயமாக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட சாதக, பாதக விளைவுகளைப் பரிசீலிக்குக.

   (10 புள்ளிகள்)

3. "சுதந்திரத்தின் பின்னர் நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கங்கள் எடுத்த பல தொடர் நடவடிக்கைகள் ஒப்பீட்டு ரீதியாக பெருந்தோட்டத் துறையின் மீதே அதிக தாக்கத்தினை ஏற்படுத்தின" இக் கூற்றினைப் பொருத்தமான உதாரணங்கள் தந்து விபரிக்குக.

(20 புள்ளிகள்)

4. இலங்கையின் கைத்தொழில் கொள்கை தொடர்பாக ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் கொள்கையின் நோக்கங்களையும், செயற்பாடுகளையும் விபரிக்குக.

(20 புள்ளிகள்)

5. இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி பல்வேறு காரணிகளால் தீர்மானிக்கப்பட்டபோதும் அவை கருவள வீதத்துடனேயே நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளன. கருவளவீதம் என்ற எண்ணக்கருவை விளக்கி அதனைத் தீர்மானிப்பதில் சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரக் காரணிகளின் பங்கினைப் பற்றிக் கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

6. அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் (SAP) கீழ் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்களைக் குறிப்பிட்டு அவற்றினுடைய சமூக, பொருளாதாரத் தாக்கங்களை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

7. இலங்கையின் வறுமை, வேலையின்மை, குறைந்த வருமான மட்டம் என்பவற்றிற்கு இடையிலான தொடர்புகளை எடுத்துக்காட்டி 1990ன் பின்னர் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக கையாளப்பட்ட பல்வேறு உபாயங்களை விமர்சிக்குக.

(20 புள்ளிகள்)

8. பின்வருவன பற்றி சிறு குறிப்பு எழுதுக.

1. உலக வர்த்தக அமையம் (WTO)
2. யூரோ (EURO)
3. அண்மைய அரசியல் ஸ்திரமின்மையும், இலங்கையின் பொருளாதாரமும்.

(20 புள்ளிகள்)